# பொதுக்காலம் 20ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

அவனி ஆளும் ஆண்டவனின் பிள்ளைகளாக இறையருள் நாடி இறை இல்லம் நோக்கி விரைந்து வந்துள்ள உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 20ஆம் ஞாயிறுத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்போடு வரவேற்கின்றோம்.

தனது நிறைவான ஆசீரால் நம்மை நாளும் மகிழச் செய்த இறைவனுக்கு நன்றி சொல்லி, அவர் காட்டிய வழிகளிலிருந்து விலகி நடந்த தருணங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுவோம்.

இன்றைய வாசகங்கள் இறைவனின் பிள்ளைகள் பெறும் ஆசீரை எடுத்துரைக்கின்றன.

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா பிற இன மக்களை இறைவனின் மக்களாக வாழ அழைப்பு விடுக்கின்றார். ஆண்டவரின் ஊழியராய் திருப்பணி புரிந்து, ஆண்டவரோடு கொண்ட உடன்படிக்கையில் தவறாது, நீதியைக் கடைப்பிடித்து வாழ்ந்த பிற இன மக்களை ஆண்டவர் தனது திருமலைக்கு அழைத்து மகிழச் செய்கிறார் என்பதை விவரிக்கின்றார்.

இன்றைய திருப்பாடலில் தாவீது அரசர், கடவுளின் மாட்சியைப் புகழ்ந்து பாடி அவரின் ஆசீரை வேண்டுகின்றார். வருணிக்க இயலாத அளவுக்கு வல்ல செயல்கள் ஆற்றும் இறைவனை வாழ்த்திப் பாடுகின்றார். நேர்மையோடு மக்களை ஆளும் இறைவனை நினைந்து கடவுளைப் போற்றிப் புகழ்கின்றார். வேற்று நாட்டினரும் கடவுள் அருளும் மீட்பை உணர்ந்து மகிழ்ச்சியுடன் பாடுகின்றனர்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், பிற இன மக்களுக்கு திருத்தூதுப் பணி செய்ய அழைக்கப்பட்ட திருத்தூதர் பவுல், தான் அழைக்கப்பட்டதன் மேன்மையை உணர்ந்து பெருமிதம் கொள்கின்றார். கீழ்ப்படியாமையால் கடவுளின் இரக்கத்தை இழந்த தன் இனத்து மக்களுக்காக வருந்துகின்றார்; அவர்களின் மீட்பினை எதிர் நோக்குகின்றார். ஆனால் பிற இனத்தார் தான் அறிவித்த நற்செய்தியை கேட்டு, அதில் நம்பிக்கை கொண்டதால் கடவுள் அவர்களுக்கு வழங்கும் மேலான இரக்கத்தை நினைந்து மகிழ்வு கொள்கின்றார்.

இன்றைய நற்செய்தி வாசகம் கானானியப் பெண் கொண்ட நம்பிக்கையை எடுத்துக்காட்டுகின்றது. இஸ்ரயேல் குலத்தாரின் காணாமற் போன ஆடுகளாய் இருப்போரிடமே தான் அனுப்பப்பட்டதாகச் சொல்லி இயேசு அந்தப் பெண்ணின் நம்பிக்கையைச் சோதித்தாலும் ‘ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்க’ தான் வந்துள்ளதை நிறைவேற்றும் வண்ணம் அந்தப் பெண்ணின் மகளை குணமாக்குகின்றார்.

நாம் வாழும் இந்த உலகில் பல்வேறு சூழ்நிலைக்காரணிகளால் ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட மக்களைக் காண்கின்றோம். அவர்களின் துயர் நீக்க என்றாவது நாம் துணிந்திருக்கின்றோமா? சிந்திப்போம் இன்றைய திருப்பலியில்.

இறைவனின் பிள்ளைகளாக, நம்மோடு வாழும் சக மனிதரில் இயேசுவைக் கண்டு அவர்களின் துன்பத்தில் பங்கெடுக்கின்றோமா? ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவே இயேசு சாதாரண மனிதனாக மண்ணுலகம் வந்தார். தான் வந்த நோக்கத்தினை செவ்வனே நிறைவேற்றி, நம் பாவங்களுக்காக தன்னையே பாவக்கழுவாயாக ஒப்புக் கொடுத்து, தனது இறையாட்சிப் பணியை தொடர்ந்து நிறைவேற்ற திருத்தூதர்களை ஏற்படுத்தினார். இறை இல்லத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலிகளினால் இன்றும் திருச்சபை தன்னிடம் ஒப்படைக்கபட்டுள்ள மக்களை நிறை வாழ்வுக்கு இட்டுச் செல்கிறது. மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறை மன்றாட்டின் இல்லத்திலிருந்து மக்களும் இறை அருளைப் பெற்றுச் செல்கின்றனர்.

மண்ணில் வாழும் அனைவரும் ஏதோ ஒரு நோக்கத்திற்காகவே பிறப்பெடுக்கின்றனர். நாம் வாழும் இந்தக் குறுகியக் காலக் கட்டத்தில் நம்மாலான உதவிகளை துயரத்தில் வாடுவோருக்கு அளித்து நம்மில் கிறிஸ்துவினைப் பிரதிபலிப்போம்.

ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்யும் போது கடவுளுக்கு கடன் கொடுக்கின்றோம் என்பதை உணர்ந்து, இருப்பதைப் பகிர்ந்து இன்பம் காண்போம்; இறைவனின் அன்புப் பிள்ளைகளாகவே இருப்போம்; வாழ்க்கை வசந்தமாகட்டும்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. உமக்குத் திருப்பணி புரிய ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தவரே எம் இறைவா!

திரு அவையினை வழிநடத்தும் திரு அவைப் பணியாளர்களை ஆசீர்வதியும். இவர்கள் தாங்கள் அழைக்கப்பட்டதன் மேன்மையை உணர்ந்து, உமது பிள்ளைகளாகிய எங்களை உமது அன்பின் வழியில் நடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நேர்மையோடு மக்களினங்களை ஆளும் அரசரே எம் இறைவா!

நாடுகளை ஆளும் ஆட்சியாளர்களை ஆசீர்வதியும். இவர்கள் ஏற்றத்தாழ்வு கருதாமல், எல்லா மக்களையும் சமநிலையில் பாவித்து, அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி, நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. கானானியப் பெண்ணின் நம்பிக்கையினால் அவரது மகளைக் குணமாக்கினவரே எம் இறைவா!

உம்மை அறியாது உம்மில் விசுவாசம் கொள்ளாது வாழும் மக்களை ஆசீர்வதியும். இவர்கள் உண்மைக் கடவுளான உம்மில் விசுவாசம் கொண்டு நீர் அளிக்கும் அன்பையும், அருட்கொடைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. உமது திருமுக ஒளியை எம்மீது வீசச் செய்து எமக்கு ஆசி வழங்குபவரே எம் இறைவா!

எம்மிடையே வாழும் இளைய தலைமுறையினரை ஆசீர்வதியும். இவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட மக்களின் துயரினைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் தியாக உள்ளத்தினைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com